1982 மார்ச் 4]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மத வாதிகளின் எண்ணங்களைப் புண்படுத்துவதாக இருப்பதால், இந்தக் கேள்வி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈஸ்வரன் கோயில் உற்சவர் சிலையின் மதிப்பு என்ன ? அந்தச் சிலையை வழி பாட்டிற்கு நீதிமன்றத்திலே இருந்து வாங்கித் தருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ? அதனால், உற்சவம், திருவிழா செய்வது தடைபடுவதால், அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருந்து 60,000 ரூபாய் அதற்கு ஜாமீன் தர வேண்டுமென்று கேட்பதிலிருந்து, அதனுடைய மதிப்பு அதையொட்டி இருக்கிறது என்பது தெரிகிறது. அப்படி தர வேண்டுமென்று கேட்பார்களானால், அதற்கு அற நிலையத்துறை பொறுப்பேற்று அதுபற்றி பரிசீலிக்கும் என்பதை நான் முதலில் கேள்விக்கு பதிலளித்திருக்கிறேன்.

திரு. என். எ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை ; அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தென்காசி விசுவநாதர் ஆலயத்திற்கு ராஜகோபுரம் கட்டும் பணி.

*வினா எண் 344—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லா, தென்காசி விசுவநாதர் கோயில் ராஜகோபுரம் கட்டுவது தொடர்பாக அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். ஆலய அறங்காவலர் குழு கோரிக்கை வைத்ததின் தொடர்பாக, திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு திருப்பணி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. எஸ். என். இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்காசி இராஜ கோபுரம் இருந்த காலங்களிலிருந்து, கிழக்கே கீழபாவூர் வந்தவுடனே தென்காசி அழகாகத் தெரியும். இப்போது பல ஆண்டுகளாகியும் அந்தக் கோபுரம் புதுப்பிக்கப்படாமல் இருக்கிறது. அதைப் புதுப்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1963ஆம் ஆண்டிலே அதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகும், அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு நிதி வசூல் செய்து, அந்தத் திருப்பணியை முடிப்பதற்கு யாரும் முன் வராத காரணத்தால், அது தடைபட்டு நிற்கிறது. காரணம், அதற்கு 30 இலட்ச ரூபாய் செலவாகும் என்று அப்போது மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது திருப்பணிக் குழுவினர் அளித்திருக்கின்ற அந்த எஸ்டிமேட்படி, சுமார் 70 இலட்சத்தைத் தாண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இது ஒரு மிகப் பெரிய திருப்பணியாக இருக்கிற காரணத்தாலே, திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தலைமையிலே ஒரு திருப்பணிக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே திருப்பணி துவங்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நமது ஷெரீப் அவர்களுடைய தலைமையிலே திருப்பணிக் குழு போடப்பட்டு அந்தக் கோபுரத் திருப்பணிகள் செம்மையுற முடிவுறும் என்றதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். அந்தக் காசி விசுவநாதர் ஆலயம் மிகப் பழமையானதாக இருக்கிற காரணத்தால் சிற்பங்களை எல்லாம் செம்மைப்படுத்துவதற்கு முன் போட்டோ படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே திருப்பணி பற்றிய கேள்விக்கான விவரங்கள் என்னிடத்திலே உள்ளன. இதுபோன்ற ஆலயக் கோபுர திருப்பணிகள் நடைபெறுகிறபோது முறையாக என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுமோ அவைகள் பின்பற்றப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1982 மார்ச் 4]

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக திருப்பணிகள் நடக்கக்கூடிய இடத்திலே அதன் பெயரால் தொல்பொருளாக இருக்கிற சிலைகள் அதனுடைய ஒரிஜினாலிட்டியை இழக்கக்கூடிய அளவிற்கு சில மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பணிகள் என்பது கோபுரங்கள் அல்லது மற்றக் கட்டடங்களைப் பொறுத்துதான் வருகின்றன. கோபுரங்களிலே உள்ள இந்த சிலைகள் அல்லது பொம்மைகள் முதலியவை முறையாக ஸ்தபதிகளினாலே அல்லது அதைப்பற்றி கற்று அறிந்தவர்களாலேதான் மீண்டும் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 345—திரு. பெ. சு. திருவேங்கடம் மற்றும் திரு. செ. சிவசாமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மேற்கு பகுதி பயன்பெறும் வகையில் நீலகிரி T.V. அஞ்சல் நிலையம் அமைக்க வேண்டுமென மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இன்றையதினம் டி.வி. பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தெற்கு பக்கத்திலே கொடைக்கானலிலே கோபுரம் அமைக்கிற போது தெற்கு மாவட்டங்கள் பயன் பெறும் என்று சொன்னார்கள். இப்போது சிலோன் டி.வி. யிலே தெற்கு மாவட்டங்களிலே பார்க்கக்கூடிய ஒரு வசதி ஏற்பட்டிருக்கிறது. கோவை, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களிலேதான் இந்த டி.வி. பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்காக அந்தப் பக்கத்திலே ஒரு கோபுரம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS